செய்தி வெளியீடு எண்—307 நாள்—3.4.2010

**அடையாறு சுற்றுச் சூழல் பூங்கா அமைக்கும் பணி**
**துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு**

* * * * * * *

அடையாறு சுற்றுச் சூழல் பூங்கா அமைக்கும் பணியினை 6 கி.மீட்டர் தூரம் நடந்து சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தபின் செய்தியாளரிடம் மு.க.ஸ்டாலின் தெரிவித்ததாவது:—

சென்னை மாநகரின் சுற்றுச் சூழல் தூய்மையை மேம்படுத்தும் வகையில் அடையாறு ஓடை மற்றும் முகத்துவாரப்பகுதியில் 358 ஏக்கர் பரப்பில் அடையாறு பூங்காவை ஏற்படுத்த கலைஞர் அரசு முடிவெடுத்து, முதற்கட்டமாக 58 ஏக்கர் பரப்பளவில் தற்போது பணிகள் நடைபெற்றுவருகிறது. இதற்காக அரசு ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பணிகள் பிச்சாண்டிக் குளம் காடு வளர்ப்பு குழுவிடம் ஒப்படுக்கப்பட்டுள்ளது. தற்போது நில அபிவிருத்திப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடைபாதைப் பணிகள் வருகின்ற ஜுன் மாதத்தில் முடிக்கப்படவுள்ளது. பூங்காவில் சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை கற்பிக்கும் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை, 90 ஆயிரம் செடி வகைகள் நடப்பட்டுள்ளன. இப்பூங்காவில் சிறுவர்கள் விளையாட்டு பகுதி அமைக்கப்பட்டுள்ளது. குளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. முதல் கட்டப்பணிக்காக ரூ.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, டிசம்பர் 2010 ல் இப்பூங்கா பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்படும். எஞ்சிய 300 ஏக்கருக்கான விரிவானத் திட்டமதிப்பீடுகள் விரைவில் தயாரிக்கப்பட்டு, 300 ஏக்கர் திட்டப்பரப்பில் உள்ள பகுதியில் “பசுமை மையம்” ஏற்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் வெற்றியை குறிக்கும் வகையில், இப்பூங்கா பகுதியில் மீன்கள், தவளைகள், பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், தும்பிகள் போன்ற உயிரினங்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது. இப்பூங்கா சென்னையில் உள்ள பூங்காவிற்கு எல்லாம் சிகரமாக அமையும். சென்னையின் சுற்றுச் சூழலை மேம்படுத்த பெரிதும் பயன்படும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இவ்வாய்வின் போது சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்ரமணியன், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை உறுப்பினர் செயலர் திரு. க. பணீந்திர ரெட்டி, துணை முதலமைச்சரின் செயலாளர் திரு.கே.தீனபந்து, பிச்சாண்டி காடு வளர்ப்பு குழுவின் ஆலோசகர் திரு. ஜோஷ் ப்ரூக் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.